13.10.2025 அ.வ.எண். 17/2025 DW–1

| | |
|---|---|
| பெயர் | செல்வகுமார் |
| த.பெ. | முத்துச்சாமி கவுண்டர் |

**<u>சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. இரண்டாம் பிரதிவாதி சிவபிரகாசம் எனக்கு இரத்த உறவினர் என்று சொன்னால் சரிதான். அவர் ரியல் எஸ்டேட்டில் இடம் வாங்கி விற்கும் தொழில் செய்துவருகிறார் என்று சொன்னால் சரிதான். நானும் அவரும் ஒன்றாக சேர்ந்து இடம் வாங்கி விற்கும் தொழில் செய்துள்ளோம் என்று சொன்னால் தவறு. நான் சட்ட கல்வி பயின்றுள்ளேன் என்றால் சரிதான். தற்போது நான் வழக்கறிஞர் தொழில் செய்துவருகிறேன் என்று சொன்னால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலம் மற்றும் எதிர் வழக்குரையில் கண்டுள்ள சங்கதிகள் உண்மைதான் என்றும் அவற்றை நான் படித்துப்பார்த்து தான் கையொப்பம் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். பொதுவாக ஒரு இடத்தை வாங்க விரும்பினால் அதனை நேரில் சென்று பார்த்து, அந்த இடம் தொடர்பான ஆவணங்களை ஆராய்ந்து ஒருவேளை பொது அதிகார பத்திரம் கொடுத்தபின் அதுதொடர்பான ஆவணங்களையும் ஆராய்ந்து பின்னர் தான் அந்த இடத்திற்கு கிரைய ஒப்பந்தம் செய்துகொள்வோம் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தினை நான் 30.04.2007 ம் தேதி கிரையம் பெற்றேன்.

2. இரண்டாம் பிரதிவாதி 1ம் வாதியின் பொது அதிகார முகவராக இருந்து எனக்கு தாவா சொத்தினை கிரையம் கொடுத்தார் என்று சொன்னால் சரிதான். நான் கிரையம் பெறுவதற்கு முன்னர் தாவா சொத்தினை நேரில் சென்று பார்த்துள்ளேன். அந்த சொத்தில் வாதி மற்றும் மனைவி குடும்பத்தாருடன் அந்த சமயத்தில் குடியிருந்து வந்தார் என்று சொன்னால் நான் சென்ற சமயத்தில் அவர் அங்கு குடியில்லை. வாதிகள் குடும்பத்தார் தாவா சொத்தில் சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக இன்று வரையிலும் குடியிருந்து வருகிறார்கள் என்று சொன்னால் தவறு. நான் தாவா சொத்தினை பார்த்தபோது அங்கு வீடு வாசல் இருந்தது என்று சொன்னால் சரிதான். தற்போதும் அந்த இடத்தில் வீடு வாசல் இருந்தது என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்தின் முகவரி – 3/151, ரோஜா நகர், முதலிபாளையம், சர்க்கார் சாமக்குளம் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. தற்போதும் வாதிகள் அந்த இடத்தில் தான் குடியிருந்து வருகிறார்கள் என்றும், வழக்கிற்காக நான் இல்லை என்று சொல்கிறேன் என்று சொன்னால் தவறு. நான் 20.12.2006 ம் தேதி பொது அதிகார முகவருடன் செய்துகொண்டதாக சொல்லப்படும் கிரைய ஒப்பந்தத்தினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் கிரைய தொகை ரூ. 90,000/–. 20.12.2006 ம் தேதி நான் சொல்வதுபோல் கிரைய ஒப்பந்தம் எதுவும் ஏற்படுத்தவில்லை என்றும், அவ்வாறு ஒப்பந்தம் ஏற்படுத்தியிருந்தால் அதனை நான் நீதிமன்றத்தில் தாக்கல்

செய்திருப்பேன் என்று 13.10.2025 அ.வ.எண். 17/2025
DW-1

| | |
|---|---|
| பெயர் | செல்வகுமார் |
| த.பெ. | முத்துச்சாமி கவுண்டர் |

**<u>சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. இரண்டாம் பிரதிவாதி சிவபிரகாசம் எனக்கு இரத்த உறவினர் என்று சொன்னால் சரிதான். அவர் ரியல் எஸ்டேட்டில் இடம் வாங்கி விற்கும் தொழில் செய்துவருகிறார் என்று சொன்னால் சரிதான். நானும் அவரும் ஒன்றாக சேர்ந்து இடம் வாங்கி விற்கும் தொழில் செய்துள்ளோம் என்று சொன்னால் தவறு. நான் சட்ட கல்வி பயின்றுள்ளேன் என்றால் சரிதான். தற்போது நான் வழக்கறிஞர் தொழில் செய்துவருகிறேன் என்று சொன்னால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலம் மற்றும் எதிர் வழக்குரையில் கண்டுள்ள சங்கதிகள் உண்மைதான் என்றும் அவற்றை நான் படித்துப்பார்த்து தான் கையொப்பம் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். பொதுவாக ஒரு இடத்தை வாங்க விரும்பினால் அதனை நேரில் சென்று பார்த்து, அந்த இடம் தொடர்பான ஆவணங்களை ஆராய்ந்து ஒருவேளை பொது அதிகார பத்திரம் கொடுத்தபின் அதுதொடர்பான ஆவணங்களையும் ஆராய்ந்து பின்னர் தான் அந்த இடத்திற்கு கிரைய ஒப்பந்தம் செய்துகொள்வோம் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தினை நான் 30.04.2007 ம் தேதி கிரையம் பெற்றேன்.

2. இரண்டாம் பிரதிவாதி 1ம் வாதியின் பொது அதிகார முகவராக இருந்து எனக்கு தாவா சொத்தினை கிரையம் கொடுத்தார் என்று சொன்னால் சரிதான். நான் கிரையம் பெறுவதற்கு முன்னர் தாவா சொத்தினை நேரில் சென்று பார்த்துள்ளேன். அந்த சொத்தில் வாதி மற்றும் மனைவி குடும்பத்தாருடன் அந்த சமயத்தில் குடியிருந்து வந்தார் என்று சொன்னால் நான் சென்ற சமயத்தில் அவர் அங்கு குடியில்லை. வாதிகள் குடும்பத்தார் தாவா சொத்தில் சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக இன்று வரையிலும் குடியிருந்து வருகிறார்கள் என்று சொன்னால் தவறு. நான் தாவா சொத்தினை பார்த்தபோது அங்கு வீடு வாசல் இருந்தது என்று சொன்னால் சரிதான். தற்போதும் அந்த இடத்தில் வீடு வாசல் இருந்தது என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்தின் முகவரி – 3/151, ரோஜா நகர், முதலிபாளையம், சர்க்கார் சாமக்குளம் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. தற்போதும் வாதிகள் அந்த இடத்தில் தான் குடியிருந்து வருகிறார்கள் என்றும், வழக்கிற்காக நான் இல்லை என்று சொல்கிறேன் என்று சொன்னால் தவறு. நான் 20.12.2006 ம் தேதி பொது அதிகார முகவருடன் செய்துகொண்டதாக சொல்லப்படும் கிரைய ஒப்பந்தத்தினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் கிரைய தொகை ரூ. 90,000/-. 20.12.2006 ம் தேதி நான் சொல்வதுபோல் கிரைய ஒப்பந்தம் எதுவும் ஏற்படுத்தவில்லை என்றும், அவ்வாறு

ஒப்பந்தம் ஏற்படுத்தியிருந்தால் அதனை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் தவறு. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் கடந்த 17.04.2007 ம் தேதி சிவபிரகசாமும், செந்தில்குமாரும் ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திகொண்டதாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி செந்தில்குமார் என்பவர் இரண்டாம் பிரதிவாதியான சிவபிரகாசத்தின் உடன் பிறந்த தம்பி என்று சொன்னால் சரிதான். மேற்படி கிரைய ஒப்பந்தம் ஆனது 1ம் வாதிக்கு இரண்டாம் பிரதிவாதி ரூ. 1,00,000/– தொகையினை 06.11.2006 ம் தேதி கடனாக கொடுத்திருந்ததால் அதற்கு ஆதரவாக ஏற்படுத்தி கொண்ட ஒப்பந்தம் என்று சொன்னால் தவறு. 06.11.2006 ம் தேதி மேற்படி கடனுக்கு ஆதரவாக தான் 1ம் வாதி இரண்டாம் பிரதிவாதியின் பெயருக்கு பொது அதிகார பத்திரம் எழுதி பதிவு செய்துகொடுத்திருந்தார் என்று சொன்னால் கடன் கொடுத்ததாக சொல்வது தவறு, ஆனால் பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்து பதிவு செய்து கொடுத்திருந்தார்.

3. 06.11.2006 ம் தேதி நான் பதிவு அலுவலகம் செல்லவில்லை என்று சொன்னால் சரிதான். இரண்டாம் பிதிவாதியிடம் இருந்து 1ம் வாதி ரூ. 1,00,000/– கடன் பெற்றிருந்தாரா என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான். கடந்த 1995 ம் ஆண்டு 1ம் வாதி ஈஸ்வரன் என்பவரிடம் கடன் பெற்று அதற்கு ஆதரவாக தாவா சொத்தினை கிரையம் கொடுத்திருந்தார் என்று விவரம் எனக்கு தெரியுமா என்று சொன்னால் தெரியாது. அந்த கடனை 1ம் வாதி திருப்பி செலுத்திவிட்டு மீண்டும் தாவா சொத்தினை 1ம் வாதி தன் பெயரில் கிரையம் செய்துகொண்டார் என்று எனக்கு தெரியுமா என்று சொன்னால் எனக்கு தெரியாது. மேற்கண்ட கடனை திருப்பி செலுத்தவேண்டி 1ம் வாதி வெளியே பெற்றிருந்த கடனை அடைக்கவேண்டி இரண்டாம் பிரதிவாதியிடம் பெற்ற கடனுக்கு ஆதரவாக இந்த வழக்கில் கண்டுள்ள பொது அதிகார பத்திரத்தினை எழுதி கொடுத்து ரூ. 1,00,000/– கடன் பெற்றிருந்தார் என்று சொன்னால் தவறு. பொதுவாக பொது அதிகார பத்திரம் யாருக்கு ஆதரவாக எழுதி கொடுக்கபட்டதோ அந்த பொது அதிகார பத்திரம் இரத்து செய்யப்பட்ட பின்னர் அந்த சொத்தினை பொறுத்து அவர் எந்த பத்திரமும் எழுதி கொடுக்க உரிமையில்லை என்று சொன்னால் சரிதான், அதற்கான அறிவிப்பு அனுப்பி அதை செய்யவேண்டும்.

4. மேற்படி அறிவிப்பு என்பது நேரடியாகவும் அந்த பத்திரத்தினை இரத்து செய்தவர் தெரிவிக்கலாம் என்றும், எழுத்து மூலமாகவோ அல்லது வழக்கறிஞர், நாளிதழ் அறிவிப்பு மூலமாகவோ செய்யலாம் என்று சொன்னால் சரிதான். அந்த மூன்றும் சட்டப்படி செல்லத்தக்கது என்று சொன்னால் வாய்மொழியாக இரத்து செய்வதாக கூறுவது ஏற்கதக்கதல்ல, மற்ற இரண்டும் ஏற்கத்தக்கது. தாவா சொத்தினை கிரையம் பெறுவதற்கு முன்னர் வில்லங்க சான்று எடுத்துப் பார்த்தேனா என்றால் பார்த்தேன். அதை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை

என்று சொன்னால் சரிதான். கிரையத்திற்கு முன்னர் எனக்கு கிரையம் செய்து கொடுத்த பொது அதிகாரம் செல்லும் நிலையில் உள்ளதா என்பதை பதிவு அலுவலகத்திற்கு சென்று உறுதிசெய்யப்பட்ட பின்னர் தான் கிரையம் பெற்றேன் என்று சொன்னால் சரிதான்.

5. நான் 30.04.2007 ம் தேதி தான் கிரையம் பெற்றேன் என்று சொன்னால் சரிதான். நான் வழக்கு சொத்தினை கிரையம் பெற்ற தேதிக்கு முன்னர் கடந்த 29.03.2007 ம் தேதி மேற்படி பொது அதிகார பத்திரத்தினை 1 ம் வாதி இரத்து செய்துவிட்டார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. நான் வில்லங்கம் எடுத்து பார்த்த 26.04.2007 ம் தேதி மேற்படி பொது அதிகார பத்திரம் நிலுவையில் தான் இருந்தது என்பதை உறுதி செய்து தான் கிரையம் பெற்றேன். மேற்கண்ட விவரத்தை நான் எதிர்வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் தெரிவிக்காமல் தற்போது தான் முதன்முதலாக வழக்கிற்காக சொல்வதால் அது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் தவறு. கடந்த 26.04.2007 ல் எடுக்கப்பட்டதாக சொல்லக்கூடிய வில்லங்கசான்றினை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். அந்த வில்லங்கச்சான்றில் மேற்படி பொது அதிகார பத்திரம் இரத்து செய்யப்பட்டிருந்ததா என்றால் பொது அதிகார பத்திரம் நிலுவையில் இருந்தது. அவ்வாறெனில் அந்த 26.04.2007 ம் தேதியிட்ட அந்த வில்லங்கச்சான்றில் 29.03.2007 ல் இரத்து செய்யப்பட்ட பொது அதிகார பத்திரம் நிலுவையில் இருந்ததாக சொல்கிறேன் என்று சொன்னால் சரிதான். பொது அதிகார பத்திரம் சாதாராணமாக எடுக்கக்கூடிய வில்லங்கச்சான்றிதழில் தெரிய வராது என்று சொன்னால் சரிதான். அவ்வாறெனில் பொது அதிகார ஆவணம் நிலுவையில் இருந்ததாக நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் இல்லை, பதிவு அலுவலகத்தில் இருந்து அத்தாட்சி பெற்றிருந்தேன். அவ்வாறு நான் சொல்லும் அத்தாட்சியினை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். அவ்வாறு நான் அத்தாட்சி பெற்றதாக சொல்வது பொய் என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும், என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்று சொன்னால் தவறு.

(மேற்கொண்டு குறுக்குவிசாரணை செய்ய வேண்டி தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.

சொன்னால் தவறு. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் கடந்த 17.04.2007 ம் தேதி சிவபிரகசாமும், செந்தில்குமாரும் ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திகொண்டதாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி செந்தில்குமார் என்பவர் இரண்டாம் பிரதிவாதியான சிவபிரகாசத்தின் உடன் பிறந்த தம்பி என்று சொன்னால் சரிதான். மேற்படி கிரைய ஒப்பந்தம் ஆனது 1 ம்

வாதிக்கு இரண்டாம் பிரதிவாதி ரூ. 1,00,000/- தொகையினை 06.11.2006 ம் தேதி கடனாக கொடுத்திருந்ததால் அதற்கு ஆதரவாக ஏற்படுத்தி கொண்ட ஒப்பந்தம் என்று சொன்னால் தவறு. 06.11.2006 ம் தேதி மேற்படி கடனுக்கு ஆதரவாக தான் 1ம் வாதி இரண்டாம் பிரதிவாதியின் பெயருக்கு பொது அதிகார பத்திரம் எழுதி பதிவு செய்துகொடுத்திருந்தார் என்று சொன்னால் கடன் கொடுத்ததாக சொல்வது தவறு, ஆனால் பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்து பதிவு செய்து கொடுத்திருந்தார்.

3. 06.11.2006 ம் தேதி நான் பதிவு அலுவலகம் செல்லவில்லை என்று சொன்னால் சரிதான். இரண்டாம் பிதிவாதியிடம் இருந்து 1ம் வாதி ரூ. 1,00,000/- கடன் பெற்றிருந்தாரா என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான். கடந்த 1995 ம் ஆண்டு 1ம் வாதி ஈஸ்வரன் என்பவரிடம் கடன் பெற்று அதற்கு ஆதரவாக தாவா சொத்தினை கிரையம் கொடுத்திருந்தார் என்று விவரம் எனக்கு தெரியுமா என்று சொன்னால் தெரியாது. அந்த கடனை 1ம் வாதி திருப்பி செலுத்திவிட்டு மீண்டும் தாவா சொத்தினை 1ம் வாதி தன் பெயரில் கிரையம் செய்துகொண்டார் என்று எனக்கு தெரியுமா என்று சொன்னால் எனக்கு தெரியாது. மேற்கண்ட கடனை திருப்பி செலுத்தவேண்டி 1ம் வாதி வெளியே பெற்றிருந்த கடனை அடைக்கவேண்டி இரண்டாம் பிரதிவாதியிடம் பெற்ற கடனுக்கு ஆதரவாக இந்த வழக்கில் கண்டுள்ள பொது அதிகார பத்திரத்தினை எழுதி கொடுத்து ரூ. 1,00,000/- கடன் பெற்றிருந்தார் என்று சொன்னால் தவறு. பொதுவாக பொது அதிகார பத்திரம் யாருக்கு ஆதரவாக எழுதி கொடுக்கபட்டதோ அந்த பொது அதிகார பத்திரம் இரத்து செய்யப்பட்ட பின்னர் அந்த சொத்தினை பொறுத்து அவர் எந்த பத்திரமும் எழுதி கொடுக்க உரிமையில்லை என்று சொன்னால் சரிதான், அதற்கான அறிவிப்பு அனுப்பி அதை செய்யவேண்டும்.

4. மேற்படி அறிவிப்பு என்பது நேரடியாகவும் அந்த பத்திரத்தினை இரத்து செய்தவர் தெரிவிக்கலாம் என்றும், எழுத்து மூலமாகவோ அல்லது வழக்கறிஞர், நாளிதழ் அறிவிப்பு மூலமாகவோ செய்யலாம் என்று சொன்னால் சரிதான். அந்த மூன்றும் சட்டப்படி செல்லத்தக்கது என்று சொன்னால் வாய்மொழியாக இரத்து செய்வதாக கூறுவது ஏற்கதக்கதல்ல, மற்ற இரண்டும் ஏற்கத்தக்கது. தாவா சொத்தினை கிரையம் பெறுவதற்கு முன்னர் வில்லங்க சான்று எடுத்துப் பார்த்தேனா என்றால் பார்த்தேன். அதை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். கிரையத்திற்கு முன்னர் எனக்கு கிரையம் செய்து கொடுத்த பொது அதிகாரம் செல்லும் நிலையில் உள்ளதா என்பதை பதிவு அலுவலகத்திற்கு சென்று உறுதிசெய்யப்பட்ட பின்னர் தான் கிரையம் பெற்றேன் என்று சொன்னால் சரிதான்.

5. நான் 30.04.2007 ம் தேதி தான் கிரையம் பெற்றேன் என்று சொன்னால் சரிதான். நான் வழக்கு சொத்தினை கிரையம் பெற்ற தேதிக்கு முன்னர் கடந்த

29.03.2007 ம் தேதி மேற்படி பொது அதிகார பத்திரத்தினை 1ம் வாதி இரத்து செய்துவிட்டார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. நான் வில்லங்கம் எடுத்து பார்த்த 26.04.2007 ம் தேதி மேற்படி பொது அதிகார பத்திரம் நிலுவையில் தான் இருந்தது என்பதை உறுதி செய்து தான் கிரையம் பெற்றேன். மேற்கண்ட விவரத்தை நான் எதிர்வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் தெரிவிக்காமல் தற்போது தான் முதன்முதலாக வழக்கிற்காக சொல்வதால் அது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் தவறு. கடந்த 26.04.2007 ல் எடுக்கப்பட்டதாக சொல்லக்கூடிய வில்லங்கசான்றினை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். அந்த வில்லங்கச்சான்றில் மேற்படி பொது அதிகார பத்திரம் இரத்து செய்யப்பட்டிருந்ததா என்றால் பொது அதிகார பத்திரம் நிலுவையில் இருந்தது. அவ்வாறெனில் அந்த 26.04.2007 ம் தேதியிட்ட அந்த வில்லங்கச்சான்றில் 29.03.2007 ல் இரத்து செய்யப்பட்ட பொது அதிகார பத்திரம் நிலுவையில் இருந்ததாக சொல்கிறேன் என்று சொன்னால் சரிதான். பொது அதிகார பத்திரம் சாதாராணமாக எடுக்கக்கூடிய வில்லங்கச்சான்றிதழில் தெரிய வராது என்று சொன்னால் சரிதான். அவ்வாறெனில் பொது அதிகார ஆவணம் நிலுவையில் இருந்ததாக நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் இல்லை, பதிவு அலுவலகத்தில் இருந்து அத்தாட்சி பெற்றிருந்தேன். அவ்வாறு நான் சொல்லும் அத்தாட்சியினை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். அவ்வாறு நான் அத்தாட்சி பெற்றதாக சொல்வது பொய் என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும், என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்று சொன்னால் தவறு.

(மேற்கொண்டு குறுக்குவிசாரணை செய்ய வேண்டி தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.